என்பதை எண்ணிப்பார்த்துத்தான் தேர்தலை நடத்த பயப்படுகிறீர்கள். ஆனால் நாங்கள் தேர்தலைச் சந்திக்கத் தயார் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஈ) ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

(சில உறுப்பினர்கள் பேச எழுந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கெனவே உள்ளாட்சிகள் சம்பந்தப்பட்ட இரண்டு சட்ட முன்வடிவுகள் அறிமுகம் செய்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்து தெரிவித்துவிட்டனர். இனி அறிமுகம் செய்ய இருக்கின்ற சட்ட முன்வடிவுகளும் உள்ளாட்சிகள் சம்பந்தப்பட்டவையாகும். ஒவ்வொரு சட்டமுன்வடிவு அறிமுகம்செய்கின்ற நேரத்தில் ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்தவர்களும் வெவ்வேறு உறுப்பினர்கள் மூலம் அதே கருத்தைத் தான் திரும்பத் திரும்ப சொல்ல நேரிடும். அவையின் நேரம் கருதியும், எல்லா சட்ட முன்வடிவுகளும் ஒரே மாதிரியான நோக்கத்தைக் கொண்டவையாக இருப்பதாலும், அதிலே தெரிவிக்கப்படுகின்ற கருத்துக்களில் வேறுபாடு இருக்காது என்பதாலும், இந்த அவையில் அவற்றின் மீது 7ஆம் தேதி விவாதம் வர இருக்கின்ற காரணத்தாலும், அப்போது மற்ற எல்லா உறுப்பினர்களும் பேசலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனம்: அறிமுகம் செய்கின்ற நேரத்தில் எதிர்ப்பு தெரிவிக்க வாய்ப்பு கொடுக்கவேண்டும். காரணம், ஒவ்வொரு பில்லும் தனித்தனியாக அறிமுகம் செய்யப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் அல்லது ஊராட்சி மன்றங்கள் அமைக்கப்படும் போது, புதிதாக தேர்தல் நடத்தப்படும் போது, தாழ்த்தப் பட்டவர்களுக்கும் பெண்களுக்கும் என தனி இடங்கள் ஒதுக்கப்பட்டு நடத்தப்படும் என்பதை திராவிட முன்னேற்றக் கழகம் வரவேற்கிறது என்றாலும், நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன், ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு முன்னாலே இதே அவையில் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், அதேபோல் பெண்கள் ஆகியோருக்கு இடங்கள் ஒதுக்கப்படுவது போல், சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கின்ற சவரத் தொழி லாளர்கள், சலவைத் தொழிலாளர்கள் ஆகியோருக்கும், மேற் கண்ட அமைப்புகளில் இடங்களைப் பிடிப்பது கஷ்டமாக இருப் பதால், அவர்களுக்கும் தனி இட ஒதுக்கீடுசெய்து தர இத்தகைய சட்டங்களிலே வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும் புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்டமுன்வடிவு அறிமுகம் செய்கிற நேரத்தில் உறுப்பினர் கேள்வி கேட்கக் கூடாது.

* திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்வதை நான் எதிர்க்கிறேன். ஏனென் றால், இன்று ஊராட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு கள் இல்லாததன் காரணமாக டெவலப்மென்ட் ஆக்டிவிட்டீஸ் கடுமையாக பாதிக்கப்படக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் சாலை கள் பராமரிப்பது அல்லது சாலைகள் அமைப்பது இவைகள் கூட இன்று நடைமுறையில் ஒத்திவைக்கப்பட்டிருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்டதொரு குழு அங்கு இருக்குமானால் அதை எதிர்த்து அவர்கள் நிச்சயமாக சில நட வடிக்கைகள் எடுத்திருக்க முடியும். ஆனால் இன்று அங்கு தனி அதிகாரிகள் இருப்பதன் காரணமாக அரசு நடவடிக்கைகளை அவர்களால் எதிர்க்க முடியாத ஒரு நிலை ஏற்படுகிறது. இன்று தமிழகத்தில் இருக்கக்கூடிய மக்கள் சென்ற சில தேர்தல் களின் அனுபவத்தை வைத்து ஒரு தேர்தல் வந்தாலாவது சில குழாய்க் கிணறுகள் வராதா அல்லது சாலைகள் வராதா என்று எண்ணக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருப்பதால் ஊராட்சிகளுக் கான தேர்தல்களை நடத்த வேண்டுமென்ற மிக முக்கியமான தேவை இன்று தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது.

1983 மார்ச் 4] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

சர்வகட்சிக் கூட்டத்தை கூட்டிப் பேசும்போது அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; இந்தத் தேர்தல்களை நடத்துவதற்கு என்னென்ன நடவடிக்கைகளை அரசு விரைவில் எடுக்க வேண்டுமோ அந்த முறையில் விரைவில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று. ஆனால் அரசாங்கம் அந்த முறையில் விரைவில் தேர்தல்களை நடத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இங்கே முதல் அமைச்சர் அவர்கள் கூட இது சம்பந்தமாக ஒரு சர்வகட்சிக் கூட்டம் நடத்தப்படும் என்று சென்ற சட்ட மன்றக் கூட்டத்தில் சொன்னார்கள். இன்னும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஆகவே உடனடியாக சர்வகட்சிக் கூட்டத்தைக் கூட்டி தேர்தல்களை நடத்துவதற்குள்ள நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்குப் பதிலாக இப்படிப்பட்டதொரு சட்ட முன்வடிவை கொண்டு வந்திருப்பது சரியல்ல. இதை அமைச்சர் அவர்கள் வாபஸ் வாங்கி தேர்தல்களை நடத்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டு இதை அறிமுகம் செய்வதை நான் எதிர்க்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 19 ஊராட்சி ஒன்றியங்கள் கலைக்கப்பட்ட ஒன்றியங்களாக அறிவிக்கப்பட்டன. ஆகவே அதற்குரிய திருத்த சட்டமுன்வடிவைத்தான் நாம் கொண்டு வந்திருக்கிறோம். ஏற்கெனவே நான் இரண்டு சட்ட முன்வடிவுகளை அறிமுகம் செய்து வைத்திருக்கிறேன். ஆகவே இதை மூன்றாவது சட்ட முன்வடிவாக அறிமுகம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது என்பது நியாயமாக இருக்க முடியாது. ஆகவே இதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' தமிழ்நாடு 1983—ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.